**15.04.2026** **<u>அசல் வழக்கு எண்.23/2018</u>** **Starting Time :1.19 p.m.**
**<u>வா.சா.1</u> திருமதி. வனராணி க/பெ. இராமானுஜம்**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1).** என் தகப்பனார் பெயர் கண்ணன் என்றால் சரிதான். என் தாயார் பெயர் காசியம்மாள் என்றால் சரிதான். எனது தகப்பனார் 1978ல் காலமானார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 1,2 வாதிகளான நாங்களும் 5ம் பிரதிவாதி குமாரி என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். மற்றொரு சகோதரி சித்ராங்கி என்றும், அவர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி சித்ராங்கி என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3ம் வாதியான கணேசன் மட்டும் தான். அவரது கணவர் பெயர் என்ன என்றால் கிருஷ்ணன் ஆவார். மேற்படி கிருஷ்ணன் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

**2).** என் பெற்றோருக்கு நான்கு பெண் பிள்ளைகளாகிய எங்களை தவிர 1 முதல் 4 பிரதிவாதிகளான வேலாயுதம், ஆறுமுகம், ஏழுமலை, சங்கர் ஆகியோர்களும் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் இலட்சுமணன் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு மூன்று மனைவிகள் என்றால் சரிதான். என் தாத்தாவின் 2ம் மனைவியின் மகன் பெயர் பலராமன் என்றால் சரிதான். என் தாத்தாவின் 3வது மனைவிக்கு துர்க்கை, அலமேலு என்ற இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். என் தாத்தா அவரது மகன்களுக்கு சொத்தை பிரித்துக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான், எனது தகப்பனாருக்கும், பலராமனுக்கும் பிரித்துக் கொடுத்துவிட்டார்.

**3).** எனது தாத்தாவிற்கு கடம்பை கிராமத்தை தவிர வேறு எங்கும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. கடம்பையில் உள்ள சொத்தை தான் பிரித்துக் கொடுத்தார் என்றால் சரிதான். எனது தாத்தா எனது தகப்பனாருக்கும் மற்றும் பலராமனுக்கும் சொத்தை பிரித்துக் கொடுக்கும்போது ஆவணம் ஏதும் எழுதினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த வருடம் எனது

தாத்தா சொத்தை பிரித்துக் கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் பிரித்து கொடுத்தார் என்றால் எனது அப்பாவிற்கு ஒரு ஏக்கரும், எனது சித்தப்பாவிற்கு ஒரு ஏக்கரும் பிரித்துக் கொடுத்தார். மேற்படி எனது தகப்பனாருக்கு கொடுத்த ஒரு ஏக்கர் ஒரே பகுதியில் உள்ள சொத்துக்களா என்றால் ஒரே பகுதியில் உள்ள சொத்துக்கள் தான்.

**4**). மேற்படி எனது அப்பாவிற்கும் சித்தப்பாவிற்கும் எந்த பக்கம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் எனது அப்பாவிற்கு கிழக்கு மேற்காக தெற்கு பக்கமும், என் சித்தப்பாவிற்கு கிழக்கு மேற்காக வடக்கு பக்கமும் ஒதுக்கப்பட்டது. மேற்படி எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட ஒரு ஏக்கரில் தான் நாங்கள் பாகம் கோருகிறோமா என்றால் எனது அப்பா எனது சித்தப்பாவிடம் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தையும் கிரயம் வாங்கினார். மேலும் எனது கணவரின் பெரிய தகப்பனாரிடமிருந்தும் ஒரு ஏக்கர் கிரயம் வாங்கினார், ஆக மொத்தம் எனது தகப்பனாருக்கு 3 ஏக்கர் சொத்துக்கள் ஆகும். மேற்படி 3 ஏக்கரில் தான் நாங்கள் தலா 1/8 பாகம் கேட்கிறோமா என்றால் எனது தகப்பனார் 40 செண்ட் நிலமும் கிரயம் வாங்கினார், அதையும் சேர்த்து 3.40 செண்ட்டில் பாகம் கேட்கிறோம்.

**5**). மேற்படி 40 செண்ட்டை எனது தகப்பனார் யாரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் பெருமாள் என்பவரின் மகனிடம் இருந்து கிரயம் வாங்கினார். மேற்படி எனது தகப்பனார் கிரயம் பெற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அனைத்து ஆவணங்களையும் எனது தம்பி எடுத்துச் சென்று விட்டார், அதனால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகலை பெற்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு நாங்கள் முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**6**). நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து விவரத்தில் புஞ்சை சொத்துக்கள் 8 அயிட்டத்திற்கும் நஞ்சை சொத்துகள் ஒரு அயிட்டம் மற்றும் வீட்டு மனைக்கும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி குறிப்பிட்டுள்ள அயிட்ட சொத்துக்களில் எவை எவை எனது

தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றும், அவருக்கு பாகமாக வந்த சொத்துக்கள் என்றும் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமாவதற்கு முன்பு எனக்கும் சித்ராங்கி என்பவருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றால் சரிதான். என்னை எந்த ஊரில் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் கடம்பையில் திருமணம் செய்து வைத்தார்கள். எனது சகோதரி சித்ராங்கியை எந்த ஊரில் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் நெமிலியில் திருமணம் செய்து வைத்தார்கள். திருமணத்திற்கு பின்னிட்டு நானும் எனது சகோதரியும் அவரவர் கணவர் வீட்டில் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

**7**). எனது சகோதரிகள் அஞ்சலா மற்றும் குமாரிக்கு எனது தம்பிகளான 1 முதல் 4 பிரதிவாதிகள் தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். எனது தாயார் கடைசி காலம் வரை யாருடன் வசித்து வந்தார் என்றால் எனது தம்பிகள் உடன் தான் வசித்து வந்தார். எனது தம்பிகள் திருமணத்திற்கு பின்னிட்டு ஒன்றாக வசித்து வந்தார்களா என்றால் தனித்தனியாக வசித்து வந்தார்கள். நானும் மற்ற வாதிகளும் ஏதேனும் விசேஷ காலங்களில் மட்டும் வந்து செல்வோம் என்றால் சரிதான். எங்களுக்கு திருமணத்திற்கு பின்னிட்டு சீர்வரிசை ஏதும் செய்தார்களா என்றால் இல்லை. எனது தகப்பனார் காலமான பிறகு சீர்வரிசை ஏதும் செய்தார்களா என்றால் இல்லை.

**8**). எனது இரு சகோதரிகளான அஞ்சலா மற்றும் குமாரி ஆகியோருக்கும் திருமணம் செய்து வைத்தது போக வேறு ஏதும் சீர்வரிசை செய்தார்களா என்றால் இல்லை. எனது தாயாரும் எங்களுக்கு திருமண சீர்வரிசை தவிர வேறு ஏதும் செய்யவேண்டாம் என்று கூறிவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் எதற்காக அவ்வாறு கூறினார் என்றால் எனது தம்பிகள் சிறிய வயதாக இருந்து வந்ததால் அவ்வாறு கூறினார். எனது தகப்பனாரும் எங்களுக்கு சொத்துக்கள் எதுவும் கொடுக்கக்கூடாது என்று கூறினாரா என்றால் அவ்வாறு ஏதும் கூறவில்லை. எனது சகோதரி சித்ராங்கி என்பவர் எனது தகப்பனார் காலமாவதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.**

**Ending time : 1.45 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.